# சமூக விஞ்ஞானம்

காலாண்டு ஆய்விதழ்

## தமிழ்நாடு சிறப்பிதழ்





# தமிழர் தன்னையறிதலும் மாற்றியமைத்தலும்

தமிழ்நாடு ஒரு திருப்புமுனையில் உள்ளது. மிகவும் சிக்கலான சமூக-பொருளாதார கட்டமைப்பு நெருக்கடி இந்த திருப்புமுனையை அவசியமாக்கியுள்ளது. தமிழ்நாட்டு இயற்கைச் சூழலின் வாழ்நிலையும், தமிழர்கள் வாழ்நிலையும் புதிய மாற்றங்களைக் கோருகின்றன. அரசியல் / பண்பாட்டுச் சீரழிவுகள் அனைத்தளாவிய நெருக்கடியின் அடையாளமாய்த் தீவிரமடைந்து வருகின்றன.

முதலாளித்துவ உலகமயத்தைச் சார்ந்த மத்திய - மாநில அரசுகளின் பொருளாதார சீர்திருத்தங்களும் - மத / சாதிய அடையாளங்கள் மீதான அடிப்படைவாத பிற்போக்கு அரசியல் / பண்பாட்டு வளர்ச்சியும் இருபதாம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட 'தமிழகம்' என்ற படிமத்தை கிழித்தெறிந்து விட்டது.

நிலவளமும் - நீர்வளமும் இழந்த பாலையாய் தமிழகம் மாறிப் போகிற நிகழ்வுப் போக்கு காரணமாய் வாழ்நிலைப் பதட்டம் ஏற்பட்டுவிட்டது. தொழில் வளர்ச்சியடைந்த நகரங்களின் தமிழகப் பிரச்சினைகள், டெல்டா சாகுபடி வேளாண் பகுதிகளின் தமிழக பிரச்சினைகள், மேட்டுப் பிரதேச மக்களின் பிரச்னைகள், கடலோரத் தமிழர்களின் பிரச்சனைகள் என முரண்பட்ட பிரச்சனைகள் இந்த வாழ்நிலைப் பதட்டத்தை தீவிரமாக்கிவிட்டன.

இவைகளோடு, கல்லாமையும் - வேலையின்மையும், சாதியமும் - பெண்ணடிமைத்தனமும், மதமடமையும் - நுகர்வுச் சந்தை போதைகளும் என பலப்பல தீமைகள் தீயெனப் பரவி வருகின்றன.

இவற்றின் காரணமாக, தமிழகத்தை பழைய முறைகளில் அறிதல் இனி இயலாத ஒன்றாகி விட்டது. மூன்றாம் உலக மக்களிலேயே மிகச் சிறந்த அறிவாற்றலையும், வரலாற்றுணர்வையும் மரபாகப் பெற்ற 'தமிழ் இனம்' புதிய வரையறுப்புகளுக்குள் - தமிழ் பேசும் மக்களின் சிக்கலான வாழ்நிலையை ஒருங்கிணைத்த வகையில் அறிவியல் பூர்வமான வரையறைக்குள் கொண்டுவரப்பட வேண்டும். தமிழ்ச் சமூகம் அறிவியல் யுகத்து சமூகமாக மாறிக் கொள்ள வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தின் கீழ் உள்ளது. இதனால், தன்னை அறிதல் பற்றிய பிரச்னைக்குத் தமிழ்நாடு மீண்டும் செல்ல வேண்டியுள்ளது.

தன்னை அறிந்து கொள்வதில் தமிழ்நாட்டுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான வரலாறு உண்டு. யவனர், சீனர், அராபியர் என அன்னியர் பலருடனும் - மௌரியர், ஆரியர் என்பன போன்ற அண்டையாருடனும் உறவாடி இயங்கிய தமிழகம் தொல் பழங்காலம் தொடங்கி தொல்காப்பியர் காலம் வரை தன்னை அறிந்து கொள்வதில் காலந்தோறும் உயிரோட்டமுள்ள நெகிழ்வுத் தன்மைகளை வெளிப் படுத்தியுள்ளது. திணை வாழ்க்கை முறையிலிருந்து வர்க்க அரசு உருவாக்க சமூக வாழ்நிலை மாற்றமடையத் தொடங்கியபோது சுரண்டலுக்கும், ஒடுக்குமுறைக்கும் எதிரான தமிழர் அறிதல் முறை, போர்க்குணத்தோடு வளர்க்கப்பட்டது.

வரலாற்றின் இடைக்காலத்தில் சாதியமும் - மத நிறுவனங்களும் சமூக உணர்வு நிலையின் மீது முழுமையாகச் செயல்பட்டுத் தமிழ் மக்களை இருட்டில் அமிழ்த்திய போதும், தமக்கு அளிக்கப்பட்ட வரலாற்று எல்லைகளில் மனிதநேய பண்பாட்டு இலக்கோடு கூடிய தமிழர் அறிதல் முறை வீரியத்துடனே வளர்ந்தது. மிகுந்த அடக்குமுறைக்கு மத்தியிலும் கூட அறிவியல் தடம் சார்ந்த அறிதல் மூலம் சமூக மாற்றத்துக்கான பிரகடனங்கள் வெளியிடப்பட்டன. பக்தி இயக்கம், சூபி இயக்கம், சித்தர் இயக்கம் எனப் பல இயக்கங்கள் செயல்பட்டன.

Samooga Vignanam, Quarterly
R.DIS. NO. 788/2003. Dt. 15.07.2003

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்"
- மகாகவி பாரதியார்

மீண்டும்.... மறுபதிப்பில்

தமிழில் வருகிறது

**கார்ல் மார்க்ஸ்**

எழுதிய பெருநூல்



# மூலதனம்

அனைத்து மூன்று பாகங்களும் சேர்த்து
3200 பக்கங்கள் கொண்ட 5 புத்தகங்கள்.
விலை ரூ. 1200/-

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை - 600 098,
போன் : 26359906, 26251968,

**கிளைகள் தமிழகமெங்கும் :-**

சென்னை
28604563, 1664

பாண்டிச்சேரி
2357403

திருநெல்வேலி
2323990

ஓசூர்
2545726

திருவான்மியூர்
24404873

தஞ்சாவூர்
231371

திண்டுக்கல்
2432172

ஊட்டி
2441743

அம்பத்தூர்-O.T
26574627

திருச்சி
2700885

கோவை
2380554

வேலூர்
2234495

மதுரை
2344106
2350271

சேலம்
2450817

பாவை பப்ளிகேஷன்ஸ்
28482441, 28482973